அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ணிய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் I.] SEPTEMBER, 1901-௵ செப்ற்றெம்பர். [இலக்கம். 3.

பிராணிகளைப் போற்றி வளர்க்கும் வகை.

வாயில்லாத பிராணிகளுடைய சவுக்கியத்தை ஆலோசித்துப்பாராமல் தங்களுடைய வினோதத்தையே பெரிதாக நினைத்து அநேகர் அவைகளுக்கு உபத்திரவமான செய்கை செய்கிறார்கள். இதற்கு இரண்டொரு திருஷ்டாந்தம் எடுத்துக் காட்டுவோம். இக்காலத்தில் அநேகர் குதிரைகளின் வால்மயிரைக் கத்தரிப்பது அழகென்று எண்ணி அதைக் கத்தரித்துக் கொடுமை செய்கிறார்களே. அவர்களைத் தீர்க்காலோசனை யில்லாதவர்களென்றே சொல்லவேண்டுமல்லவா? ஈயெறும்பு கொசுகு உண்ணி முதலிய பூச்சிகள் வந்து கடிக்கும்பொழுது அவற்றை யோட்டிக்கொள்ள உபயோகப்படாமல் செய்கிறார்களே. அவர்களுடைய கைகளிரண்டையும் பின்னே சேர்த்துக் கட்டிவிட்டால் அவர்களுக்கு எப்படியிருக்குமென்பதை அவர்கள் சற்றும் ஆலோசித்தவரல்லர். ஈயோட்டுகிற சாமரமாகவும் உபயோகப்படாதபடி தங்கள் குதிரைகளின் வால் மயிரைக் கத்தரித்து விடுகிறவர்கள் அதன் பிரயோஜன மின்னதென்பதைத் தெரிந்துகொள்ளாமல் உபத்திரவம் செய்வதுமன்றி, தாம் அதற்கு அழகு செய்வதாகவும் எண்ணுகிறார்கள். உலகில் ஒவ்வொருவருடைய விருப்பம் ஒவ்வொருவிதமென்பதற்கு இதுவே திருஷ்டாந்தம். கடவுள் குதிரைகளுக்கு வாலை யளித்திருப்பது ஒரு பெரிய நன்மைக்காகவேயன்றி வீணுக்கல்ல; அவ்வுபயோகத்தை யறிந்துகொள்ளாமல் மனிதன் கடவுளுடைய சிருஷ்டியைச் சீர்ப்படுத்தக் கூடுமென்று எண்ணினால், அதைவிட அறியாமை வேறுண்டோ? குதிரைக்கு வால் அழகா, வாலில்லாமையழகா? கூழைவால் குதிரையைப் பார்த்தால் எவ்வளவு விகாரமாயிருக்கிறது? நல்ல புத்தியுள்ள குதிரையானால், வாலிழந்த அவமானம் அதன் மனத்தில் உறைத்தேயிருக்கும். கடிவாளத்தை வாயில் மாட்டி இழுத்து அதன் கழுத்தை நிமிர்த்தாதிருந்தால் அது வெட்கத்தினால் தலையைத் தூக்காமல் தொங்கவிட்டுக்கொண்டே யிருக்கும்.

வீடுகளில் வளர்க்கப்பட்டுத் துன்பப்படுகிற பிராணிகளில் குதிரைக்கு இரண்டாவது மாடு; அதற்குப்பின் நாய். நாய்களும் அவற்றின் சுயபுத்திக்குத் தோன்றுகிறபடி ஓடியாடிக்கொண்டிருந்தால் அவற்றிற்கு மிகவும் சவுக்கியமாகவே யிருக்கும். அப்படியில்லாமல் அநேகர் தங்கள் வினோதத்திற்காகவும் வீட்டுக்காவல் முதலான வேலைகளுக்காகவும் நாய்களைப்பிடித்து நிர்ப்பந்தித்துக்கட்டிக்காவலில் வைத்து வளர்க்கிறார்கள். அநேகர் தங்கள் நாய்களைத் தங்கள் இஷ்டப்படியோடவும் இரண்டு கால்களால் நடக்கவும் நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். இவ்விதமான வேலைகள் செய்யும் திறமை நாய்களுக்கு இயற்கையாகக் கிடையாதே. தன் இஷ்டப்படி தெருவில் ஓடும் நாய்கள் எவ்வளவு உற்சாகத்துடனே குரைத்துச் சந்தோஷமாகத் திரிகின்றன. வீட்டில் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருக்கும் நாய்களுக்கு அந்த ஆநந்த மெப்பொழுதாவது உண்டாகுமோ? அது தன்னை வளர்க்கும் யஜமானனுக்கு அடிமைப்பட்டு அவன் செய்கிற இம்சைகளையெல்லாம் பொறுத்து அவனுக்கு உண்மை தவறாமல் ஊழியஞ்செய்தே காலங்கழிக்கிறது.

இவைகளெல்லாம் வாயில்லா ஜந்துக்கள் தாமே; இவற்றிற்குச் சுகமேது, துக்கமேது என்று சிலர் நினைக்கக்கூடும். அப்படி நினைப்பது மிகவும் பிசகு. ஒவ்வொரு ஜந்துவுக்கும் அதனதன் கருத்தை வெளியிடுகிற பாஷை ஒன்றுண்டு; அந்தப் பாஷை நமக்குத் தெரியாமையாலேயே அவற்றிற்குப் பாஷை யில்லையென்று சொல்லலாகாது. எல்லா ஜந்துக்களும் தமக்குள்ள சுகதுக்கங்களையும் விருப்பு வெறுப்புகளையும் தங்கள் பாஷை

யால் வெளியிடும். நமது குதிரைகளை நாம் அன்புடன் ஆதரித்தால் அது நம்மைக் கண்டவுடனே களிப்படைந்து கனைக்கிறதல்லவா? அன்புள்ள யஜமானர்களைக் கண்டால் நாய்கள் எவ்வளவு சந்தோஷமாகக் குரைக்கின்றன? இவ்விதமாகவே எல்லாப் பிராணிகளுக்கும் சுகதுக்கங்களையுணர்ந்து அவற்றை வெளியில் காட்டும் திறமுமுண்டாகையால் ஜீவகோடிகளிடத்தில் நாம் அன்பும் அருளும் உடையவர்களாயிருக்க வேண்டுவது அவசியம்.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு."

சாதாரணமான பூச்சிகள்.

ஜீவனுள்ள ஜந்துக்களில் எதுவானாலும், சிறியவைகளாயிருந்தால் அவற்றை யெல்லாம் பூச்சிகளென்று நாம் பொதுவாகச் சொல்லிவிடுகிறோம். கோடைகாலங்களில் ஈ, கொசுகு முதலான பல பூச்சிகளை நாம் விசேஷமாகக் காண்கிறோம்; "பூச்சி மரிக்கிறதில்லை புழுவுஞ் சாகிறதில்லை" என்று நினைக்கும்படி அவற்றால் உண்டாகும் உபத்திரவம்பொறுக்கமுடியாமல் தவிக்கிறோமே; அவைகளைப்பற்றி நீங்கள் என்ன தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்? அவற்றின் சொரூபத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டுவது மிகவும் அவசியமானது. பிரதிதினம் நமது கண்ணெதிரில் காணப்பட்டுக்கொண்டும், கோடையில் பாதிநாள் நமது கண், காது, மூக்கு முதலானவிடங்களில் வந்து பாடித்துன்பப்படுத்திக் கொண்டுமிருக்கிற பூச்சிகள் சொரூபத்தை நாம் தெரிந்துகொள்ளாம லிருக்கலாமோ? ஜீவனுள்ளதோ, ஜீவனில்லாததோ, இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பிராணிகளும் அதிசயிக்கத்தக்கவையாயிருப்பதால், இவைகளும் அதிசயமானவைகளேயாம். இவை மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் துன்ப முண்டாக்குகின்றவையாயிருப்பினும், இவற்றில் சில நல்லவையாகவேயிருக்கின்றன.

முக்கியமாக நமக்குத் தெரிந்த சிறு பூச்சிகள் வீடுகளிலும் மாட்டுத் தொட்டிகளிலும் குதிரைக் கொட்டாரங்களிலுமுள்ள ஈக்களும் கொசுக்களுமாம். இவைகளெல்லாம் அநேகமாய் மண் மலம் முதலான அழுக்குகளிலுண்டாகின்றவை. பிறக்கும்பொழுது அவை சிறு புழுவாயிருக்கும், பறக்கும் பூச்சியாக மாறினவுடனே வெயிலிலும் காற்றிலும் மேலெழுந்து பறக்கும். குளிர்ச்சி அவற்றிற்கு ஆகாதாகையால் சீதகாலங்களிலேதான் அவை வெப்பத்தை வேண்டி வீடுகளிலும் குதிரைச்சாலைகளிலும் புகுகின்றன. இப்பூச்சிகளை வீட்டினின்று வெளியே துரத்துகிற முக்கியமான உபாயமாவது, வெளிச்சமில்லாமல் அறைகளை இருட்டாக்கிவிடுவதாம்; அப்பொழுது அவை வெளியில் பறந்துபோய்விடும்; இவை அழுக்குகளில் உண்டாகின்றவையாதலால், வீடுகளிலும் வீட்டைச்சுற்றியும் அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்திருந்தால் இவை அதிகமாக உண்டாக மாட்டா. உணவுப்பொருள்களின்மீது இந்தப் பூச்சிகள் வந்து மொய்க்கும்படி செய்வது தேகசவுக்கியத்திற்கு மிகவும் அபாயமான காரியம்.

இந்தப் பூச்சிகள் ஒவ்வொருதடவையிலும் குப்பைமேட்டிலாவது வேறுவிதமான அழுக்கிலாவது நூறு இருநூறு முட்டைகளிடும். முட்டையிட்ட இரண்டுவாரத்தில் அவை பெரிய ஈக்களாகி, அவைகளுக்கு வேறு இரை அகப்படாவிட்டால் மனிதர்களை மிகுதியாகத் துன்புறுத்தும். ஆயினும் 'பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா' என்ற பழமொழிப்படி அந்தப் பூச்சிகளுக்கு அழிவையும் உடனே கடவுள் சங்கற்பித்திருக்கிறார். இல்லாவிட்டால் அவற்றின் உபத்திரவத்தில் நாம் ஒருநிமிஷமாயினும் இவ்வுலகில் ஜீவித்திருக்க முடியுமோ? குருவி முதலான சிறுபறவைகள் அவற்றைப் புழுவாயிருக்கையிலேயே அநேகமாய் அழித்து விடுகின்றன; சிலந்திப்பூச்சி வலையில் அகப்பட்டுக்கொண்டு எத்தனையோ ஈக்களும் கொசுகுகளும் இரையாவதை நாம் நமது வீடுகளில் பிரதிதினம் பார்த்துக்கொண் டிருக்கிறோமல்லவா? "ஈசலுக்கு எல்லாம் பகை" என்ற முதுமொழியுமுண்டு.

அப்படியானால் இந்தப் பூச்சிகளால் நமக்குஉண்டாகும் நன்மை யாது? இவை நமக்குச் செய்கிற நன்மை யதிகமா, தீமை யதிகமா என்று சிலர் கேள்வி கேட்கலாம். அப்படி பார்த்தால், இவற்றால் மனிதர்களுக்கு அநேகமாய் உபத்திரவமே யுண்டாகின்றது. சில ஈக்கள் குதிரைகளைக் கடித்து இம்சிக்கின்றன; சில ஆடுமாடுகளை உபத்திரவிக்கின்றன; பெரிய ஈச்சள் சில எருமைகளையும் பசுக்களையும் கன்றுகளையும் சித்திரவதை செய்கின்றன; சில பூச்சிகள் பயிர்களை யழிக்கின்றன; சில காய்கனிகளையும் பழங்களையும் புழுக்கச்செய்கின்றன. இந்தச் சிறு பூச்சிகளைப் பிடித்துத் தின்கிற பெரிய பூச்சிகளும் பலவுண்டு. அவற்றால் ஈக்களும் கொசுகுகளும் அநேகமாய் அழிந்துபோகின்றன. ஈ கொசுகு முதலியவற்றால் நமக்குச் சில நன்மைகளும் உண்டு. அவை நமது வீட்டுத்தோட்டிபோல அங்கங்குள்ள அழுக்குகளையெல்லாம் தின்று சுத்தப்படுத்துகின்றன; சில அழுகிப்போகும் ஜீவப்பொருள்களைப் புசிப்பவை; சில அழுகும் மூலவர்க்கங்களைப் புசிப்பவை. நமக்கு இப்பூச்சிகள் செய்யும் பெரிய உபகாரமொன்று கேளுங்கள் அரணியங்களில் மரங்கள் பட்டுப்போகும்படியான பாகங்களைத் துளைத்துத் தள்ளி அந்த விருக்ஷங்கள் நன்றாக வளரும்படி செய்கின்றன. இப்பூச்சிகளில்லாவிட்டால் இந்த வேலையைச் செய்ய மற்றெவராலுமாகாதென்பது நிச்சயம்.

பக்ஷிகளுக்கு வசிக்க இடங்கள்.

பழைய இருப்புக் குழாயொன்றில் ஒருநாள் பறவைக்கூடு ஒன்று இருப்பதை மாணிக்கமென்கிற பெண் பார்த்தாள். அதற்குள் உற்றுப்பார்க்கையில் உணவுக்காகத் திறக்கப்பட்ட மூன்று வாய் தோன்றின. அவற்றைக் கண்டு அவள் எலிக்குஞ்சுகளென்று எண்ணி, ‘பொன்னா, இதோ பார், இதற்குள் என்ன இருக்கின்றன பார்’ என்று பக்கத்திலிருந்த பொன்னனென்கிற அண்ணனைக் கூப்பிட்டாள்.

பொன்னன் உடனே ஓடிவந்து அதனுள் எட்டிப்பார்த்து ஆச்சரியப்பட்டு “மாணிக்கம், இது எலிக்குஞ்சன்று,” என்று கூவினான்.

“ஆனால், பின் என்ன அண்ணா அது?”

பொன்னன் நன்றாக அதை உற்றுப்பார்த்து மெல்ல அதற்குள் கையை விட்டுத் தடவிப் பார்த்து, பறவைக்குஞ்சு! பறவைக்குஞ்சு! என்று கூவினான். அதன் பக்கத்தில் ஒரு புதரிலே தாய்ப்பக்ஷி உட்காந்திருப்பதைப் பார்த்து அவன், “இதோ இவற்றின் தாய்கூட வந்து உட்காந்திருக்கிறது பார்” என்றான்.

அதைக்கேட்டு மாணிக்கம் “பறவைக்குஞ்சு! பறவைக்குஞ்சு!” என்று கைகொட்டிக் கூச்சலிட்டாள்.

அப்பால் அவள், ‘அண்ணா, இவையேன் இந்தக் குழாயில் புகுந்துகொண்டிருக்கின்றன?’ என்று கேட்க, ‘ஏனோ எனக்கும் தெரியவில்லை’ என்று பொன்னன் மறுமொழி சொன்னான்.

இச்சிறுவர்கள் இப்படி பேசிக்கொண்டேயிருக்கையில் அவர்களுடைய மாமன் பின்புறமாக வந்து, ‘இவை இதற்குள் என் இருக்கின்றனவென்றா கேட்கிறீர்கள்? இவற்றின் தாய்தந்தைகள் இதற்குள்ளே இவற்றிற்குக் கூடு கட்டி அதில் விட்டிருக்கின்றன’ என்றான்.

‘ஐயோ பாவம்! இந்தச் சிறு குஞ்சுகளை இந்தக் குழாய்க்குள்ளேயா விடுகிறது? அவை மிகவும் பொல்லாத பக்ஷிகள்’ என்று மாணிக்கம் சொன்னாள்.

‘பெண்ணே! நீ அப்படி நினையாதே; அவை மிகவும் அன்புள்ள பக்ஷிகள்; முன்யோசனையுள்ளவை. இந்தக் குழாயில் அவை கூடுகட்டின காரணம் உனக்குத் தெரியாதே; நான் சொல்லுகிறேன் கேள். பறவைக்குஞ்சுகளைப் பூனைகள் வந்து பிடித்துக்கொள்ளும்; துஷ்டப்பையல்கள் பறவைக் கூடுகளைத் திருடும். அதனால் அவை நுழையாதிருக்கும்படி இந்தக் குழாயில் கூடு கட்டின. பிள்ளைகளுடைய கைகூட இதற்குள் நுழையாது. ஆனால் சில சிறுவர் சிறுமிகளுடைய கை இதற்குள்ளும் நுழையும்’ என்று மாமன் கூறினான்.

‘நாங்கள் பக்ஷிக்கூட்டைத் திருடமாட்டோமே; அது எப்படி யிருக்கிறது என்று கையைவிட்டுத் தொட்டுப் பார்த்தேன்’ என்று பொன்னன் சொன்னான்.

‘ஆம் மெய்தான், நீங்கள் திருடமாட்டீர்கள்; சில துஷ்டப்பையல்கள் அந்த வேலை செய்வதுண்டு. நான் சிறுவனாயிருந்தபோது, பக்ஷிகள் சுகமாக வசிக்க நாங்கள் வீடு கட்டிவைப்பது வழக்கம். கோடைகாலத்தில் பறவைகள் தப்பாமல் அவ்விடத்திற்கு வந்து முட்டையிடும். இக்காலத்துப் பிள்ளைகள் பக்ஷிகளைப்பற்றி அத்தனையாகக் கவனிப்பதில்லை; அவர்கள் விளையாட்டுக்கு வெவ்வேறு பொருள்கள் வைத்திருக்கிறார்கள், எப்பொழுதும் புத்தகமுங் கையுமாகத் திரிகிறார்கள்’ என்று சொன்னான் மாமன்.

‘நாங்கள் அப்படியன்று மாமா; எனக்கும் பொன்னப்பாவுக்கும் பக்ஷிகளிடத்தில் பிரியம் அதிகம் மாமா’ என்றாள் மாணிக்கம்.

‘அப்படியானால், பக்ஷிகளைப் பிரியப்படுத்துகிற வழி சொல்லுகிறேன் கேளுங்கள்: அவைகளுக்கு வீடு கட்டிவைக்கவேண்டியது முக்கியமான காரியம். பறவைகளுக்கு வீடு கட்டுவது எப்படியென்பீர்களோ? சிறு பலகைகள் ஸம்பாதித்துச் சதுரமான பெட்டிபோலாக்கி மேலே சாய்ப்பான இறப்பு அமைத்து, அதற்குள்ளே நுழையச் சிறிய வாயிலும், மேலே சிறுசிறு சாளரங்களும் அமைத்து அப்படியே ஆணிவைத்து முடுக்கிவிட்டால் அதுவே நல்ல வீடாகும். உயரமான ஒரு உத்திரத்தின் மேல் அதை வைத்துவிட்டால் வருகிற வசந்த காலத்தில் பறவைகள் அதில் வந்து குடிபுகுந்து முட்டையிடும்’ என்று சொன்னான்.

‘அப்படியே வருமா மாமா! இப்போ நான் எனது பொம்மையினது சிறுவீட்டைப் பறவை வீடாக வைத்துவிடுகிறேன்; புதிதாகப் பறவை வீடு நிருமிக்க உளியும் ஆணிகளும் வேண்டும்; அவற்றைக் கையாளும்படியான வயது எனக்கு இன்னும் வரவில்லையாகையால் அம்மாள் எனக்கு அவைகள் வாங்கிக் கொடுக்கமாட்டாள். பொன்னப்பா பெரியவனாகையால் அவன் செய்யக்கூடும்’ என்றாள் மாணிக்கம்.

அதுகேட்டு மாமன் சந்தோஷப்பட்டு, அப்படியே செய் குழந்தாய். உன் பொம்மை வீடு பக்ஷிகளுக்குப் பிரியமான விடமாகவேயிருக்கும். இதைக் கேட்கையில் எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. நாங்கள் சிறுவர்களா யிருந்தபோது நானும் என் அண்ணனும் பறவைவீடு கட்டினோம். அப்பொழுது நான் உன்னைப்போலவே சிறுவனாயிருந்ததனால் நன்றாகக் கட்டத் தெரியாமல் என் கையில் வந்தபடி கோணலாய் ஒரு வீடு கட்டினேன்; அதற்குப் பழுதுசொல்லப் பலர் வேண்டாம்; எனது கண்ணே போதுமானது. என் அண்ணனோ, கண்ணாடி ஜன்னல்களமைத்து அழ

கான வீடு ஒன்று நிருமித்து என் வீட்டைப் பார்த்து நகைத்தான். இரண்டு வீடுகளையும் உயரமான ஓரிடத்தில் வைத்திருந்தோம் மறுவருஷம் வசந்தகாலத்தில் பறவைகள் அவ்விடத்திற்கு வந்து வெகுநேரம் சுற்றிப் பார்த்துக் கடைசியில் நான் வைத்த விகாரமான வீட்டிலேயே புல் முதலியவைகளைக் கொண்டுவந்து பரப்பிக் கூடுகட்டி முட்டையிட்டன. "உருவத்தையல்லகுணத்தைப்பார்" என்பது பழமொழியல்லவா? என் அண்ணன் கட்டிய அழகான வீட்டில் ஒன்றும் நுழையவேயில்லை. அதைப் பார்க்க எனக்கே விசனமாயிருந்தது.

அதைப் பார்த்து அண்டைவீட்டுக்காரன், 'அழகான வீட்டிற்கு வாயிலும் சாளரங்களும் வடக்கு முகமாக இருப்பதால் அதில் பறவை ஒருபோதும் குடிபுகாது, பறவைக்குக் குளிர்ச்சியாகாது, "வடக்குப்பார்த்த வீட்டினும் தெற்குப்பார்த்த தெருத்திண்ணை நலம்" என்னும் பழமொழி கேட்டதில்லையா' என்றான்.

அதைக் கேட்டு நாங்கள், 'நான் அமைத்த வீட்டுக்கு வாயில் தெற்குமுகமா யிருப்பதனாலேதான் அதில் பறவை குடிபுகுந்ததென்று தெரிந்துகொண்டோம். ஆகையால் நீங்கள் இனி நிருமிக்கும் பறவை வீடுகளுக்கு வாயில் தென்முகமாயிருக்கும்படி செய்யுங்கள்' என்று சொன்னான்.

அதைக்கேட்டு மாணிக்கம் சந்தோஷமடைந்து அப்படியே செய்யவேண்டுமென்று புறப்பட்டுப் போனான்.

குதிரைகள் காட்டுகிற நேசக்குறிகள்.

வாயில்லா ஜந்துக்களில் அதிகமாக நேசம் பாராட்டுகிற குணம் நாய்களுக்கே யுண்டென்று அநேகர் எண்ணியிருக்கிறார்கள். இதனடியில் குறிக்கும் உண்மையான விருத்தாந்தத்தைப் படித்துப் பார்ப்போமானால் நாய்களுக்குள்ள அந்நற்குணம் குதிரைகளுக்கு முண்டென்று, நன்றாக விளங்கும்.—ஒரு புலத்தில் ஆணும் பெண்ணுமாய் இரண்டு குதிரைகள் "காந்தமும் ஊசியும் போல்" கூடி வாழ்ந்துகொண்டிருந்தன. சீக்கிரமே பெண்குதிரை ஒரு குட்டியும் போட்டது. அந்தப் பெண்குதிரை பிறந்தநாள்முதல் கால் கொஞ்சம் நொண்டியாயிருந்ததனால், மிக வருத்தமான வேலைகளுக்கு அதை அதிகமாய் உபயோகப்படுத்துவதில்லை. அவற்றின் யஜமானன் பிரதி தினம் கடைசியாய்த் தான் படுக்கப் போகும் பொழுது அவற்றைப் பார்த்துவிட்டுப் போவது வழக்கம்.

இப்பொழுது நாம் சொல்லப்போகிற தினத்திலும் அவன் அப்படியே வழக்கப்படி வந்து பார்த்தான். குதிரைகள் சுகமாக மேய்ந்துகொண்டிருந்தன. அப்படியிருக்க, ஐயோ! அந்தப் புலத்தின் ஓரத்தில் வெட்டுப் பள்ளமொன்றுண்டு. அதனோரத்தில் செழிப்பாய்ப் பசும்புல் வளர்ந்திருக்கக் கண்டு அதிலாசைகொண்டு அதை மேய அக்குதிரைகள் அவ்விடம் சென்றன. அந்தப் பள்ளம் கொஞ்சம் ஆழமானது. பெண்குதிரை யெப்படியோ கால்வழுக்கி அப்பள்ளத்தில் விழுந்துவிட்டது; மறுபடி மேலே ஏற அதனாலாகவில்லை; பெண்குதிரை பள்ளத்தில் வீழ்ந்து வருத்தப்படுவதைப் பார்க்கமுடியாமல் ஆண்குதிரை உடனே யஜமானன் வீட்டுக்கு ஓடி, நடந்த வரலாற்றை அங்குள்ளவருக்குத் தெரிவிக்கப் பாடுபட்டது. நாம் முன் கூறியபடி அது பள்ளத்தில் வீழ்ந்தது நடுராத்திரியோ, விடியற்காலமோ? ஆண்குதிரை செய்த உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் யஜமானன் உடனே யெழுந்து, குதிரை முன்னே வழிகாட்ட அதன் பின்னே போனான். குதிரை கடைசியில் யஜமானனைப் பெண்குதிரை வீழ்ந்திருக்கிற பள்ளத்தண்டை கொண்டுவிட்டது. ஐயோ பாவம்! அப்பொழுது அது செத்துக்கிடந்தது; மேலே ஏறுவதற்காக அது பட்ட பிரயாசையால் மல்லாந்து வீழ்ந்துபோய் வெட்டுப்பள்ளம் அதிக ஆழமானதால் மறுபடி திரும்பி மேலேறச் சாத்தியப்படாமல் வலுப்பட்டுச் செத்திருக்கவேண்டும்.

நடந்த விவரம் இன்னதென்று ஆண் குதிரைக்குத் தெரியவில்லை; அதை மேலே யெடுத்துவிடும்படித் தன்னாலானவரையில் தன் யஜமானனைத் தூண்டியது. ஊணுமுறக்கமுமில்லாமல் பிறகு வெகுநேரம் அந்தப் பேதைப்பிராணி அங்கேயே சுற்றிச் சுற்றித் தவித்துக்கொண்டிருந்தது. அந்தச் சவத்தை அவ்விடம்விட்டு அப்புறம் கொண்டு போன பிறகுதான் ஆண் குதிரையை அப்புறம் ஓட்டச் சாத்தியப்பட்டது.

குதிரைகளுக்குள்ள நேசம்பாராட்டுகிற குணத்தை வெளியிடுகிற மற்றொரு விருத்தாந்தமும் இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. மேற்சொன்ன விதமாகவே இரண்டு குதிரைகள் ஒரே புலத்தில் ஒன்றாய்ச் சேர்ந்து பலமாதகாலம் வசித்துக்கொண்டிருந்தன. அதற்குப்பிறகு அவற்றிலொரு குதிரையை மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள். தன் துணைவனை விட்டுப் பிரியவே, அதனிடத்தில் அதிகமான அன்புவைத்த மற்றொரு குதிரை அன்றுமுதல் இரையே யெடுக்கவில்லை; வரவர இளைத்துப்போயிற்று. அதை அதிகமான கருத்துடன் போஷிக்க முயன்றும், அது மிகவும் ஏக்கம்பிடித்து அப்புறம் யஜமானனுக்குச் சிறிதும் உபயோகமில்லாத தாகிவிட்டது. உண்மையாக நடந்த இந்த விருத்தாந்தத்தைப் படித்தறிந்தபிறகு, குதிரைகளுக்கும் நாய்களைப்போலவே நேசம் பாராட்டுகிற குணம் அதிகமாக உண்டென்பதில் நாம் சிறிதளவேனும் சந்தேகம் கொள்ளலாமோ? "நேசமே நிற்கும்" என்னும் பழமொழி பொய்க்காது.

இந்தியாவிலே பறவைகளைப் பாதுகாத்தல்.

லண்டன்மாநகரத்துப் பக்ஷி ரக்ஷண சபையில் சேர்ந்தவராகிய லக்ஷ்மிதாஸ் என்பவர், நமது தேசத்திலும் அதேவிதமாகப் பக்ஷிகளைத் துன்புறுத்தாமல் ஆதரிக்கவேண்டிய விஷயத்தில் அதிக ஆவல்கொண்டவராகிப் பல வருஷங்களாய் அதற்குப் பாடுபட்டுவருகிறார். காடுகளில் சுகமாகச் சஞ்சரிக்கும் பக்ஷிகளைக் கொல்லுவதும், வலை பொறி வைத்துப் பிடிப்பதும், கூட்டிலடைப்பதுமாகிய கொடுமைகள் செய்வது அவர் மனத்தைப் பலநாளாக வருத்தியது. லேடி கர்ஜன் என்னும் பெருமாட்டி இந்தியாவிலும் பக்ஷி ரக்ஷண விஷயத்தில் ஊக்கத்துடன் பாடுபடுவாளென்றும், அதற்காக லண்டன்மாநகரில் ஏற்பட்டிருப்பதுபோல இந்தியாவிலும் ஒரு சங்கம் ஸ்தாபிக்க முயல்வாளென்றும் ஆசைகொண்டு, "எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்" என்பதை உணராமல் பக்ஷிகளை வதைசெய்து இறகுகளால் ஸ்திரீகள் அலங்கரித்துக்கொள்ளும் கேடுகெட்ட வழக்கத்தை நீக்கவேண்டுமென்று அவர் அவளுக்கு ஒரு விண்ணப்ப மெழுதிக்கொண்டார். அப்பெருமாட்டி பிரயாசை யெடுத்துக்கொண்டால் அவளுடைய பெயரைக் கேட்டமாத்திரத்தில் பக்ஷி யிறகுகளால் அழகான தொப்பி செய்துகொள்ளுகிற வழக்கம் கைவிடப்படுமென்றும், பயிர்களுக்கு மிகவும் உபயோகமான பறவைகளை நெஞ்சுருக்கமின்றிச்சுடுகிற கெட்டவழக்கமும் மாறுமென்றும் அவர் நன்றாக ஆலோசித்தே அப்படிச் செய்தார். அவர் படுகிற பாட்டுக்கு எவ்வளவு பயன் கிடைக்கிறதோ, இனித்தான் அறியவேண்டும். அவர் இதுவிஷயத்தில் அதிகமாகப் பிரயாசப்படுகிறார். சில தருணங்களில் அவர் ஒருவராகவே விவேகமில்லாத ஜடங்களான பல மூட ஜனங்களுடனே போராட நேரிடுகின்றது. ஆயினும் அவர் தகுந்த ஆராய்ச்சிகளுடனும் ஊக்கத்துடனும் படுகிற பிரயாசை ஒருபொழுதும் நன்கு மதிக்கப்படாமற் போகாது; "உறுதியான காரியம் ஒருபோதும் கெடாது;" என்றைக்காயினு மொருநாள் காரிய சித்தி உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

நாய்களுக்கு அக்கிரமமாகத் தீங்குசெய்தல்.

சில தருணங்களில் கூரான எலும்புகள் நாய்களின் தொண்டையில் மாட்டிக்கொள்வதுண்டு; பல்லிடுக்குகளிலும் புகுந்துகொள்வதுண்டு. கோழிக்குஞ்சுகளின் முள்ளே அநேகமாய் அப்படி அடைத்துக்கொள்ளும். அவற்றை வெளியே யெடுக்க நாய்கள் வெகு வருத்தப்படும். தொண்டையில் எலும்புமாட்டிக்கொண்டு அதன் வேதனை பொறுக்கமாட்டாமல் அதை வெளிப்படுத்த அதிமூர்க்கமாய் நாய்கள் அவஸ்தைப்படுவது கண்டு அதன் உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் புத்தியில்லாத போலீசாரும் மற்றவர்களும் அந்த நாய்களைப் பைத்தியம் பிடித்தவை என்று தடியால் அடித்துக் கொல்லுகிறார்கள். அது எவ்வளவு அவிவேகமான காரியம் யோசித்துப் பாருங்கள்!

காய்கறி யுணவு.

ஊனுணவை மிகுதியாக உபயோகிக்கும் நாடு நகரங்களிலேகூடச் சிலகாலமாகக் காய்கறி யுணவுகளையும் கனிவகைகளையுமே மிகுதியாகக் கவனித்து வருகிறார்கள். அதனால் அவை கடைவீதிகளில் மிகுதியாக விற்பனைக்கு வரத் தலைப்பட்டிருக்கின்றன. பெரிய நகரங்களில் நடுத்தரமான ஜனங்கள் மரவுணவுகளையே மிகுதியாகக் கையாளத் தலைப்பட்டிருக்கிறார்கள். அதனால் மா, பலா, வாழை, கிச்சிலி, இலந்தை முதலான பலவகைக் கனிகள் விசேஷமாய்ப் புசிக்கப்படுகின்றன. இவ்வளவுமாத்திரமே போதாது. உணவுக்கு உபயோகமான பலவகைப் பொருள்களில் தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியமானவை இவையென்பதை யாவரும் நன்றாகக் கண்டுணர்ந்து நாளளவிலே மிகவும் ஏழை ஜனங்கள் தொடங்கி யாவரும் ஊனுணவை யொழித்து மரவுணவுகளையே உபயோகிக்கும்படியாகுமென்று எதிர்பார்க்கிறோம். யோசிக்குமளவில் விருக்ஷ வகைகளைப் போல மனிதர்களுக்கு அத்தனை உபயோகமானது மற்றொன்றுமில்லை. நன்றாய்ச் செழித்தோங்கிய சோலையினும் கண்ணுக்கினிய காட்சி வேறொன்றில்லை.

உணவுப் பொருள்களில் சேர்ந்திருக்கும் ஸத்துக்களைப் பரிசோதித்துப் பார்க்கையில் ஊனுணவிலுள்ள ஸாரங்களெல்லாம் அநேகமாகத் தானியவகை, பருப்பு, பால், நெய் முதலான பொருள்களில் நிறைந்திருப்பதாலும், ஊனுணவைவிட மரவுணவே தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியமாயிருப்பதாலும் மரவுணவைக் கையாளுவதே உத்தமமென்றும், ஊனுணவைக் கையாளுவதனால் ஜீவஹிம்ஸையொன்றுதவிர மற்றொரு விசேஷமு மில்லையென்றும் இக்காலத்துப் பண்டிதர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்த உண்மையை உணர்ந்தே இந்து தருமசாஸ்திரிகள் ஊனுணவு கூடாதென்று சாஸ்திரங்களில் ஆசார நியமத்திலே கூறியிருக்கின்றனர்.

கொடிய வேட்டைகளும் விளையாட்டுக்களும்.

நாகரிகத் தேர்ச்சி பெருத மனிதர்கள் தேகத்திலுண்டாகும் எவ்விதமான துன்பத்தையும் தாங்க வல்லவர்கள்; தாங்கியும் வழக்கப்பட்டிருக்கிருர்கள். அதனுல் அவர்கள் மற்றவர்களைத் தாங்கள் துன்புறுத்துவதனுல் அவர்களுக்கு உண்டாகும் வருத்த மிப்படிப்பட்டதென்பதைச் சிறிதும் சிந்தியாமல் அலக்ஷியமாயிருக்கிருர்கள். மிருகங்கள் முதலான ஜந்துக்கள் விஷயத்தில் இது பிரத்தியக்ஷமாக நடந்தேறிவருகின்றது. நாகரிகத் தேர்ச்சி பெற்ற மனிதர்களோ, வருத்தத்தை அதிகமாக உணர்கின்றவர்களாதலால், மற்றவர்களுக்கு எவ்விதமான துன்பமும் செய்யாதபடி வெகு ஜாக்கிரதையாயிருக்கிருர்கள். இவ்விஷயம் முக்கியமாக வாயில்லா ஜந்துக்கள் விஷயத்தில் உபயோகப்படுகின்றது. நாகரிகமும் கல்வித்தேர்ச்சியும் விருத்தியாகவாக, வேட்டையிலும் விளையாட்டிலும் அவர்கள் செய்யும் கொடுமை குறைவுபட்டுக்கொண்டே வருகின்றது. வாயில்லா ஜந்துக்கள் விஷயத்தில் கொடுமையாவது இன்னதென்பதைச் சற்று விசாரிப்போம். நோவைஉணருந் தன்மையுள்ள பிராணிகள் விஷயத்தில் அனுவசியகமான தீமை விளைவிப்பதே கொடுமை யென்னப்படும். சிலர் மான் முதலான மிருகங்களை உணவுக்காக வேட்டையாடுகின்றனர்; வேறு சிலர் கேவலம் விநோதத்திற்காக வேட்டையாடுகின்றனர். இவ்விரண்டில் முதலாவது தம் உயிரைக் காத்துக்கொள்வதினிமித்தம் உணவை வேண்டிச் செய்கிற தொழிலாதலால், ஒருவாறு ஒத்துக்கொள்ளத்தக்கதே. இரண்டாவது நியாயத்திற்கு மடுத்ததல்ல; அவசியமானதுமல்ல வாதலால், சரியானதென்று ஒருபோதும் அங்கீகரிக்கப்படமாட்டாது. இதுவன்றியும் சிறுபிள்ளைகள் பூனைகளைப் பிடித்து வீணுக்குச் சித்திரவதை செய்கிருர்கள். பெரியோர்கள் நரி முதலியவைகளை வேட்டையாடுகிருர்கள். இவ்விரண்டில் முதலாவது கொடிய செய்கையென்று தண்டனைக் குள்ளாக்கப்படுகின்றது. இரண்டாவது குற்றமற்ற பொழுதுபோக்கென்றும் அரசர்கட்குரிய சிறந்த விளையாட்டென்றும் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுவருகின்றது. யோசித்துப் பார்த்தால் இவ்வுலக வாழ்க்கை மிகப் புதுமையாகவே யிருக்கின்றது.

ஜீவஜந்துக்களில் பெரிய பிராணிகளுக்கு மனிதர்களுக்குஉள்ளதுபோலவேமூளையுடன் கூட்டப்பட்ட நாடிமண்டலமும் அதனுலாகிய ஐம்பொறியுணர்ச்சியும் உண்டு. அவை தேகத்திலுண்டாகும் நோய் முதலானவைகளை உணர்வது மாத்திரமேயன்றி, அச்சம், நடுக்கம் முதலான மனத்துயரங்களையும் உணரும் இயல்புடையனவாயிருக்கின்றன. அப்படி யில்லாவிட்டால் அதட்டியோட்டும்பொழுது பறவைகள் பயந்தோடுகின்றன; நாய்கள் நடுங்குகின்றன; குதிரை முதலான பெரிய பிராணிகளும் பிரமித்து நிற்கின்றனவே! அவை யெப்படி கூடும்? ஆதலால் நமக்கு இருப்பதுபோலவே வாயில்லா ஜந்துக்களுக்கும் வருத்தத்தை உணரும் திறமையுண்டென்பது மெய். அறிவில்லாதவர்களுக்கு இந்த உண்மை தெரியாதிருக்கலாம்; சிறுவர்களும் ஆய்ந்துணரும் திறமையில்லாதவர்களும் தமக்குத் தெரியாதென்று பாவிக்கலாம். தம்முடைய கஷ்டத்தை வாய்விட்டுச் சொல்ல வாயில்லாத ஜந்துக்களுக்குத் திறமை யில்லாமையினுலேயே அவைகளுக்கு உணர்ச்சி கிடையாதென்று, உண்மையுணர்ந்த புத்திசாலிகள் ஒருபோதும் நினையார்கள்.

பூர்வகாலத்தில் நல்ல கல்வித்தேர்ச்சியும் நீதிநெறிப்பழக்கமும் இல்லாமையினுலேயே மிகக்கொடியவிளையாட்டுக்களைக்கையாடிவந்தார்கள். அவைகளெல்லாம் இப்போது வரவரக் குறைந்துவருகின்றன. இக்காலத்தில் நடந்துவரும் குதிரைப் பந்தயம் முதலியவைகளிலேகூடக் கொடுமையுண்டென்பது அநேகருடைய கொள்கை. அதிசீக்கிரத்தில் அவைகளும் நீங்கி வாயில்லா ஜந்துக்கள் சுகப்படும்படியான நற்காலம்வருமென்பதில் சந்தேகமில்லை.

அப்படியானுல் ராஜாக்கள் வேட்டையாடலாமென்று நீதிநூல்கூறுவதற்குக் கதியென்ன வென்பீர்களோ? கேளுங்கள். அரசர்கள் போர் பழக வேண்டியவர்களாதலால் இலக்குத் தவருமல் அடிப்பது முதலானவைகளில் தேர்ச்சி பெறும் பொருட்டு அவர்களுக்கு அப்பழக்கம் வேண்டுவதே. வேட்டைக்குரிய பிராணிகளுக்குச் சுயேச்சையாகத் தப்பித்துக்கொண்டு ஓடும்படியான அனுகூலத்தைக் கொடுத்து, அதன்மேல் மனிதருடைய சாமர்த்தியமும் புத்தி கூர்மையும் விளங்கும்படி செய்யப்படும் வேட்டைகள் ஒருவாறு அங்கீகரிக்கத்தக்கவையாம். வேட்டையில், வேட்டையாடப்படுகிற பிராணிகளுக்கிருப்பதுபோல வேட்டையாடுகிறவனுக்கும் அபாயமதிகமாயிருக்க வேண்டும். அதுவே சரியான வேட்டையாம். காட்டு மனிதர்கள் தம் உணவுக்காக வேட்டையாடுவதையும் குற்றமல்லவென்று கொள்வோம். ஒருவருக்கும் ஒரு பயனுமின்றி வீணுக்கு ஜீவஹிம்சை செய்வது கொடிய பாதகம். நாகரிகம் அடைந்தவர்கள் அவ்வாறு செய்யப்புகுவது, அவர்கள் மறுபடி மிருகத்தன்மை யடைவதுபோலாகும். எளிய ஜந்துக்களிடத்தில் கொடியர்களாயிருக்கத் தலைப்பட்டால், பிறகு நாம் ஒருவர்க்கொருவர்கூட அன்பில்லாத கொடிய நெஞ்சராகும்படி நேரிடுமென்பதும், கடவுளுடைய சிருஷ்டியான எளிய ஜந்துக்களிடத்தில் நாம் இரக்கமுள்ளவராகத் தலைப்பட்டால், நாம் ஒருவர்க்கொருவர் ஒருபோதும் கொடியராயிருக்கும்படி நேரிடாதென்பதும் எப்பொழுதும் நம்மனதில் உறுதியாயிருக்கவேண்டும்.

மிருகாங்கச் சேதனம் கூடாதென்று வாதித்த மிஸ். பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் ஜீவகாருண்ய முள்ள சீமாட்டி.

வாயில்லாத ஜந்துக்கள் விஷயமாய்ப் பாடு படுகிறவர்கள் பெரிய புருஷர்களிலும் ஸ்திரீக ளிலும் மிகவும் அருமை. ஆகிலும் இந்நற்காரி யத்தில் இடைவிடாது உழைத்தவர் ஒருவர் உண்டு; அவர் யாரெனில், மிஸ். பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் பெருமாட்டியாம். சில காலத்துக்கு முன் இங்கிலாந்தில் மிகவும் கேடுகெட்ட வழக் கம் ஒன்று உண்டாயிற்று. இரணவைத்தியர்கள் கைப்பயிற்சி உண்டாவதற்காக உயிருள்ள மிருகங் களைச் சேதித்தும் அறுத்தும் வந்தார்கள். இக்கா லத்திலோ இவ்வகைப் பிராணிவதையானது சரி யல்லவென்று பெரும்பான்மையோர்க்குத் தோன் றிவருகின்றது; இதற்கு முக்கியகாரணம் மேற் கூறிய பெருமாட்டி ஒரு தலைமுறைக் காலமாகச் செய்துவந்த முயற்சியே.

வாயில்லாத பிராணிகளிடத்தில் அன்பு வைக்க வேண்டும் என்பதைக்குறித்து வழக்காடினதுதவிர வேறு நற்செய்கைகள் ஒன்றும் செய்யவில்லையா இப்பெருமாட்டி யென்றாலோ, அப்படியல்ல. இவர் செய்திருக்கிற சிறந்த காரியங்களும், நடத்தி யிருக்கிற விநோதமான நடவடிக்கைகளும் எத் தனையோ உண்டு. அவைகளையெல்லாம் விவரிக் கின் மிகப் பெருகும். சென்ற நாற்பதுவருஷ காலத்துக்குள் மிகுந்த பிரசித்தியுடன் வாழ்ந்தவர் கள் அனைவரும் இவருக்குத் தெரியும்; அவர்களில் ஒருவராவது இப்பெருமாட்டிக்குச் சினேகமில்லா தவரில்லை. அக்கீர்த்திமான்கள் தங்கள் கையால் இவருக்கு எழுதி யனுப்பியிருக்கிற கடிதங்களைப் பரிசோதித்துப் பார்ப்பதே ஆனந்தகரமாயிருக்கி றது. மிருகச் சேதன சாலையின் கொரேங்களை நிறுத்தவேண்டுமென்கிற இவருடைய கோட்பாட் டுக்கு அவர்கள் எல்லோரும் இணங்கினார்கள்.

இத்துரைமகளின் வாழ்நாளில் 1863—ம் ஆண்டு மிக்க ஏற்றமானது. அவ்வருஷத்தில்தான் இவர் தாம் கொண்ட சீர்திருத்தத் தொழிலைத் தொடங் கியதும், பத்திரிகைகள் எழுதத்தொடங்கியதும். பாரிஸ் நகரத்துக்கு அருகில் ஒரு கிராமத்தில் மிருக வைத்தியர்கள் என்று பேரிட்டுக்கொண் டிருந்தவர்கள் சிலர் தீட்டத் தீட்டக் கூராகிய ஆயுதத்தால் மிருகங்களைச் சோதித்துத் தங்களு டைய கத்தித்தொழில்களைச் செய்வதை இவர் கண்டார். அவர்கள் அவ்வாறு செய்தது தங்க ளுக்கு கைப்பழக்கமும் சாஸ்திரப்பயிற்சியும் உண் டாகும்பொருட்டன்றி வேறல்ல. இறந்துபோன மிருகங்கள்மேல் தங்களுக்கு வேண்டிய அங்க பரிசைஷகளை நடத்திப் பார்த்தாலும் போதுமான தாயிருக்க, சில குதிரைகளின்மீது அறுபதுவித மான அப்பியாசங்கள் செய்யப்பட்டனவாம். ஒரே மூச்சாக எட்டுமணிநேரம் அக்குதிரைகள் சின்னபின்னமாக வதைக்கப்பட்டனவாம். ஐயோ வென்று சொல்ல யாருமில்லாத அந்த மிருகங் களின் பரிதாபமான காட்சியானது இப்பெரு மாட்டிக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண் ணிற்று. அதுமுதல் இந்த அப்பியாசத்தைக் கண் டிக்க எவ்வளவோ பிரயத்தனம் பண்ணிவருகின் றார். அவர் பத்திராதிபராக எழுதத் தொடங்கி யதும் இக்காலந்தான். 'மனிதனுடைய சுதந்தரங் களும் மிருகங்களின் உரிமைகளும்' என்று ஒரு பத்திரிகையை முதல் முதல் எழுதினார். பிறகு பற் பல விஷயமான எத்தனையோ பத்திரிகைகளும் கிரந்தங்களும் எழுதி கிரந்த கர்த்தாவாக விளங்கி வந்தாலும், தாம் மேற்கொண்ட சீர்திருத்தும் காரி யத்தைமட்டும் சிறிதேனும் மறக்காமல் என்றும் ஒரேசீராகப் பாராட்டி முயன்றுவருகிறார்.

இவர் சங்கற்பித்துக்கொண்டிருக்கிற காரியத் தில் இவ்வளவு சிரத்தை வைத்திருக்கிறார் என் பது இவருடன் ஒருமணிகாலம் சம்பாஷித்தால் யாருக்கும் தெரியவரும். ஜீவவதை கூடாதென் னும் தம்முடைய வழக்கையாடுவதில் இவர் முன் போல இப்போது முன்வரிசையில் நிற்காவிட் டாலும், 'கத்திவதையினின்று மிருகங்களை விடு விக்க விக்ட்டோரியா வீதி சபை' என்று ஏற்பட்ட சபையின் காரியதரிசியாகச் சம்பளமில்லாமல் 10 வருஷம் சேவித்த நாளில் எவ்வாறோ, அவ்வாறே நாளைக்கும் அதிக ஊக்கத்துடன் தாம் பிடித்த கட்சிக்குப் பாடுபடுகிறார்.

மேலும் மிஸ். காப்புக்கு ஸ்திரீகளிலும் புரு ஷர்களிலும் எவரெவர்கள் சினேகமோ, அவர்கள் எல்லோரும் இவருடைய கருத்துக்கு இசைந்த வர்கள் தாம். கல்நெஞ்சராயிருப்பவரையும் தக்க வண்ணம் போதித்து மனதுருகச்செய்ய இவருக் குச் சாமர்த்தியமுண்டு. இது இவரிடத்திலிருக் கிற நேசர் கடிதங்களினால் தெரியவருகிறது. ஜீவ கருணையைப் பற்றித் தத்தமக்குத் தோன்றிய தோற் றங்களையெல்லாம் அவர்கள் எல்லாரும் கடிதத் தில் எழுதி இவருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இவருக்கு பிரௌனிங் துரை என்ன எழுதி யிருக்கிறார் என்றால், 'நமக்கு எள்ளளவும் நோவக் கூடாது என்கிற வியாஜத்துக்காக ஒரு நாயையோ பூனையையோ பிராண ஹிம்சை செய்வதைக்காட் டினும் நானே சித்திரவதைக்குள்ளாவேன்' என் றும், மற்றொரு சந்தர்ப்பத்தில் வேறொரு துர் நடத்தையைப் பற்றிப் பேசும்போது 'புறாக்களைச் சுடுவதாகிய கொரேம் எப்போது ஓயுமோ! ஜீவ வதையோ அதைவிடக் கொடியது? இதைத்தடுக்க யார் கங்கணம் கட்டுகிறார்களோ, அவர்களுக்குத்

தெய்வானுகூலமுண்டாக' என்றும் எழுதியிருக்கிறார். தென்னிஸன் என்னும் இராஜகவிசிரேஷ்டன் மிஸ். காப் நாட்டுப்புறத்தில் ஏகாந்தவாசியாயிருக்கும் காலத்தில் போய்ப்பார்த்துக் கவித்துவத்தைக் குறித்தும் வைத்தியசாஸ்திரிகள் செய்யும் கொடுமையைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்ததுமல்லாமல் 'செத்தவர்கள்மீது தம்முடைய பரிகாசங்களைக் காட்டித் தம்மிடத்தில் அன்பும் ஆதரவுமாய்த் தமது அடிவாரத்தில் கெஞ்சிக் காத்திருக்கும் நாயைக் கண்டம் கண்டமாய் அறுப்பவர்கள்' என்று தான் தன்னுடைய ஒரு கவியில் சொல்லியிருப்பதைப் பார்த்து ஒரு சாஸ்திரி மிகவும் கோபங்கொண்டார் என்றும் சொன்னாராம். இது விஷயமாக மிஸ். காப் அனுப்பிய விண்ணப்பங்களில் இராஜகவியாகிய தென்னிஸனுடைய கையொப்பமில்லாதது கிடையாது. அன்றியும் இவளை அவர் கடைசியாகக் கண்டபோது 'அம்மா போய் வருகிறேன். நற்சண்டையைச் செய்யுங்கள், மனம் தளரவேண்டாம்' என்று தைரியம் சொன்னதாகவும் தெரியவருகிறது. இப்படியே புத்தியிலும் கல்வியிலும் சிறந்தவர்கள் இவருக்கு எழுதியிருக்கிற கடிதங்கள் அனேகமுண்டு.

இந்த காப் சீமாட்டி எகிப்து முதலான நானாதேசங்களில் யாத்திரை செய்தது தவிர கிரந்தகர்த்தாவாகவும் பத்திராதிபராகவும், தமது சொந்த காரியமாக எடுத்துக்கொண்ட ஜீவகாருண்ணிய விஷயத்தைப்பற்றியும், யாத்திரை சரித்திரம் மதவிசாரம், மனத்தெளிவு, தேசாசாரம், ஸ்திரீகளொழுக்கமும் உரிமையுமாகிய நாநாவிஷயங்களைப் பற்றியும், ஆயிரக்கணக்காக புத்தகங்களும், சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் எழுதிவந்திருக்கிறார்.

இப்படி யிருந்த காலத்தில் ஒருநாள் "அடிநாக்கிலே நஞ்சும் நுனிநாக்கிலே அமிருதமும்" ஆகப் பேசி ஜந்துக்களை யறுத்துச் சோதிக்கும் சாஸ்திரவேஷதாரிகளுடைய 'கத்திவதை'க்கு அனுகூலமான ஒரு பத்திரம் தான் சம்பந்தப்பட்ட ஸ்டாண்டர்டு தினவர்த்தமானியில் அச்சிடப்பட்டிருப்பது கண்டு, அதைச் சகிக்காமல், அந்த தினவர்த்தமானி சம்பந்தமே தமக்குக் கூடாதென்று கோபித்து வேலையை விட்டுவிட்டார். 'இழந்த நாயின் விக்கியாபனங்கள்' என்றும், 'நானறிந்த நாய்கள்' என்றும், பேர் வைத்து இவர் எழுதியிருக்கிற இரண்டு சிறிய புஸ்தகங்களைப் பார்த்தால் இவர் வாயில்லாப் பிராணிகளிடத்தில் வைத்திருக்கும் இரக்கமும் அன்பும் இவ்வளவென்று நன்றாய்த் தெரியவரும்.

சிரித்த முகமுடைய இந்த பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் பெருமாட்டி ஐயர்லாண்டு தீவில் டப்ளின் நகரத்தில் பிறந்து ப்ராட்டன் பட்டணத்துப் பாடசாலையில் கல்விப்பயிற்சிசெய்து படிப்பாளியானவள். ஸ்திரீகளுடைய உரிமைகளையும் சுதந்தரங்களையும் நிலைநிறுத்தி ஆதரிக்க முயன்று பிரசங்கம்செய்த சபாவாதிகளில் சிறந்த ஸ்திரீ சிரோமணியென்றும் இந்தப் பெருமாட்டி பிரசித்தி பெற்றிருக்கின்றனர்.

வாயில்லா ஜந்துக்களைக்கொண்டு சகுனம் பார்த்தல்.

சில நாற்கால் ஜந்துக்களும் பறவைகளும் சில தருணங்களில் புலப்படுவது கெட்ட குறியென்கிற கொள்கை பல தேசங்களிலும் வெகுகாலமாயுண்டு. இந்த இந்தியாவில் நாகப்பூரிலே, அரசன் அரண்மனையின்மீது பல கருங் குரங்குகள் கூட்டமாக வந்து கூடினால் அரசனுக்கு உடனே மரணம் நேரிடுமென்று யாவரும் நம்பியிருந்தார்கள். முன்னாளில் லண்டன் மாநகரத்துக் கோட்டையிலுள்ள மிருகாசயத்தில் சிங்கங்களைச் சேர்த்துவைத்தபொழுது, அந்த மிருகங்களில் ஏதேனுமொன்று இறந்தால் உடனே இங்கிலாந்து ராஜவம்சத்தில் யாருக்காவது மரணம் நேரிடும், அல்லது வேறுவிதமான துன்பமாவது உண்டாகுமென்று எண்ணியிருந்தார்கள். அட்டிஸன் என்கிற கவி தாமெழுதிய ஒரு கிரந்தத்தில் இக்கொள்கையை வியந்தது போலப் பாவித்துப் பரிகாசமாகப் பேசியிருக்கிறார். பிறகு அவர் அம்மிருகங்களெல்லாம் ஒருவிதமான நோயுமின்றிச் சுகமாயிருக்கின்றனவாவென்று விசாரித்து, அவை அத்தனையாகத் தேக சவுக்கியம் பெற்றிருக்கவில்லையென்று மிகவும் மனம்வருந்தினர்.

வாயில்லா ஜந்துக்களைக்கொண்டு சகுனம் பார்க்கிற வழக்கம் இக்காலத்திலும் இந்துக்களிடத்தில் அநேகமாயுண்டு. பிரயாணம் புறப்படும் காலத்தில் வாயஸம் (காக்கை) வலமாவதும், கருடன், காடை, வலியன் முதலியவை இடமாவதும் நல்ல சகுனமென்றும், இப்பறவை இவற்றிற்கு மாறாகச் செல்வதும், பூனை குறுக்கிடுவதும் கெட்ட குறியென்றும் கருதுகிறார்கள். இதில் உண்மையும் சிலவுண்டு. இதனால் அந்த ஜந்துக்களை நல்லவையென்றும் தீயவையென்றும் அவர்கள் எண்ணுவதாக ஒருபோதும் கருதலாகாது. கடவுள் அவற்றிற்கு அளித்திருக்கும் அற்புதமான இயற்கையறிவினால் நமக்குப் பின்னால் உண்டாகப்போகிற நன்மை தீமைகளை அவை இப்பொழுதே நமக்கு விளக்கிக் குறிப்பாகக் காட்டுகின்றனவென்பது அவர்கள் கொள்கையாம். இதனால் அப்பிராணிகளின் அற்புதமான திறமை அனைவரும் வியக்கத்தக்கதாகின்றதல்லவா?

நீதிமொழி.—நாம் ஒருயிருக்கும் துன்பம் செய்யாமலிருக்கக் கடவோம். நடத்தல் இருத்தல் கிடத்தல் நிற்றல் உண்டல் முதலாகிய நமது தொழில்களாலும் மற்றை வழிகளாலும் சிறிய வுடம்புடைய பிராணிகளுக்கு வரும் துன்பங்களை முன்னே அறிந்து அவை வராமல் காப்பாற்றவேண்டுமென்பதுதான் இந்தப் பத்திரிகையின் தலைக்குறளின் கருத்து.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1901.